**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA2129/F/2025**

திரு R.ரெங்கராஜ் பாலண்டார் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
கிருஷ்ணகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் - 635001 … பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.R.ரெங்கராஜ் பாலண்டார் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.க.திருலோகசுந்தர், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 13.11.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கிருஷ்ணகிரி மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு துறையில் 01.03.2024 முதல் 13.11.2024 வரை தார்சாலை பராமரிப்பு (பேஜ்

ஒர்க்) பற்றிய ஆவணங்களின் நகல், புதிய சாலைகள் மற்றும் பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க விடப்பட்ட டெண்டரில் கலந்து கொண்டவர்களில் அதில் தேர்வு செய்யப்பட்ட டெண்டர்தாரர்களுக்கான ஆவண நகல், கோட்டப்பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் கள ஆய்வறிக்கை, கோட்டப்பொறியாளர் கையொப்பமிட்ட கோப்பு தொடர்பான தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 17.12.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 24.01.2025 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் 11.12.2024 நாளிட்டு வழங்கிய தகவல்கள் திருப்திகரமாக இல்லை எனவும், இனம் 2, 3 மற்றும் 4க்கு தகவல் வழங்க மறுத்துள்ள மற்றும் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களைப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள ஏற்கனவே 11.12.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA2129/F/2025</u>**
**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
சிவகங்கை வட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 630561

**<u>மனுதாரர்</u>**
திரு R.ரெங்கராஜ் பாலண்டார்,
வெங்கங்குடி கள்ளர் தெரு,
பள்ளிவிடை அஞ்சல்,
மணச்சநல்லூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
621112

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2025